# திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை
## பிறப்பிப்பவர்: திரு.வே.விஷ்ணு, இ.ஆ.ப.,

**ந.க.எண். ந3/34185/2020** **நாள்:26 .02.2021**

பொருள்: பணியமைப்பு - கருணை அடிப்படையில் பணி நியமனம் - திருநெல்வேலி மாவட்டம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் - உதவியாளராகப் பணிபுரிந்த **கணேசன்(திரு.) சு.,** என்பவர் 03.09.2020-ல் பணியிடைக் காலமானது - வாரிசும் மகளுமான **மரகதவல்லி(செல்வி) க.,** என்பவருக்கு கருணை அடிப்படையில் **இளநிலை உதவியாளராக** பணி நியமனம் வழங்கி ஆணையிடல்.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.18 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்து(Q1) துறை நாள்:23.01.2020.
2. திருமதி.கோமதி, க/பெ.(லேட்) சு.கணேசன் பாளையங்கோட்டை என்பவரது விண்ணப்பம் நாள்:25.11.2020.
3. செல்வி.க.மரகதவல்லி, த/பெ.(லேட்) சு.கணேசன் என்பவரது விண்ணப்பம் நாள்:21.11.2020.
4. பாளையங்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலரின்(வ.ஊ) கடிதம் ந.க.எண்.அ1/3026/2020 நாள்:09.01.2021.
5. பாளையங்கோட்டை வருவாய் வட்டாட்சியரின் ஒருங்கிணைந்த சான்று ப.மு.அ5/159/2021 நாள்:11.01.2021.
6. திருநெல்வேலி அரசு தேர்வுகள் துறை உதவி இயக்குநர் கடிதம் ஓ.மு.00352/உ.இ.2/2020 நாள் 17.02.2021.

--------------

## ஆணை:-

திருநெல்வேலி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு, பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உதவியாளராகப் பணிபுரிந்து **03.09.2020-ல்** பணியிடைக்காலமான **திரு.சு.கணேசன்** என்பவரின் வாரிசும் மகளுமான **செல்வி.க.மரகதவல்லி** என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க பார்வை **(4)**ல் காணும் கடிதத்தின்படி பாளையங்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ.)-ஆல் சமர்ப்பிக்கப்பட்ட கருத்துரு பார்வை (1) முதல் (6) வரையுள்ள அரசாணைகள், விண்ணப்பங்கள் மற்றும் சான்றுகளின்படி பரிசீலிக்கப்பட்டது.

**திரு.சு.கணேசன்** என்பவர் பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் **உதவியாளராகப்** பணியாற்றி கொண்டிருக்கும் போது 03.09.2020-ல் பணியிடைக் காலமானார். **அரசு ஊழியர்** (லேட்) **திரு.சு.கணேசன்** என்பவரது இளநிலை உதவியாளர் நிலையிலான பணியினை திருநெல்வேலி, மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண். ந3/31537/2009 நாள்:03.02.2011-ன்படி 01.02.2010 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது. அன்னாரின் பிறந்த தேதி 25.05.1963. அன்னார் காலமடையாமல் இருந்திருந்தால் வயது முதிர்வில் 31.05.2022-ல் ஓய்வு பெறுவார்.

பணியிடைக்காலமான உதவியாளர் **திரு.சு.கணேசன்** என்பவரது வாரிசும் மனைவியுமான **திருமதி.கோமதி** என்பவர் தனது மகள் **செல்வி.க.மரகதவல்லி** என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க கோரி 21.11.2020-ல் விண்ணப்பித்துள்ளார். தனியர் **செல்வி.க.மரகதவல்லி** என்பவர் தனக்கு பணிநியமனம் வழங்கக் கோரி 21.11.2020-ல் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். தனியரது விண்ணப்பம் 3 ஆண்டுகளுக்குள் பெறப்பட்டுள்ளது.

கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க பார்வை (5)-ல் கண்டுள்ளபடி பாளையங்கோட்டை வட்டாட்சியரால் வழங்கப்பட்ட ஒருங்கிணைந்த சான்றில் காலஞ்சென்ற அரசு ஊழியரின் மனைவி திருமதி.க.கோமதி என்பவர் பாளையங்கோட்டை வட்டம், பாளையங்கோட்டை பகுதி-2 கிராமம் மானகஞ்ச நாயனார் தெரு, க.எண். 4-1 என்ற முகவரியில் வசித்து வரும் வீடானது சொந்த வீடாகும். வீட்டின் தற்கால சந்தை மதிப்பு ரூ.8,00,000/-(ரூபாய் எட்டு இலட்சம்) ஆகும். மேற்படி வீட்டின் மூலம் எவ்வித வருமானமும் வரப்பெறவில்லையெனவும், காலஞ்சென்றவரின் மனைவி திருமதி.க.கோமதி வசித்து வரும் வீடும் பாளையங்கோட்டை வட்டம், வி.எம்.சத்திரம் கிராமம், காசிம் நகரில் அமைந்துள்ள 5 செண்டு மனை பரப்பு உள்ள பிளாட் எண். 27 கொண்ட காலிமனையும் பாகப்பிரிவினையின்படி காலஞ்சென்ற அரசு ஊழியர் (லேட்) கணேசன் என்பவரின் பெயரில் உள்ளது எனவும், மேற்கண்ட சொத்துக்களை தவிர காலஞ்சென்றவின் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர்கள் பெயரிலோ எவ்வித அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் ஏதுமில்லையெனவும், காலஞ்சென்ற அரசு ஊழியர் (லேட்) கணேசன் என்பவருடைய இறப்பிற்கு பின்னர் அவரது மனைவி திருமதி.கோமதி என்பவர் நாளது வரை மறுமணம் புரியவில்லையெனவும், காலஞ்சென்ற அரசு ஊழியர் குடும்பத்தில் எவரும் அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரியவில்லையெனவும், காலஞ்சென்ற அரசு ஊழியர் இறப்பிற்கு பின்னர் அவரது மனைவி திருமதி.கோமதி என்பவருக்கு நாளது தேதி வரையில் குடும்ப ஓய்வூதியம் மற்றும் பணபலன்கள் வரப்பெறவில்லையெனவும், அவரது குடும்பம் மிகவும் வறிய நிலையில் உள்ளது எனவும் சான்றளிக்கப்பட்டுள்ளது.

**செல்வி.க.மரகதவல்லி** என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க இதர வாரிசுகளும் ஆட்சேபணை இல்லை எனச் சான்றளித்துள்ளனர். **செல்வி.க.மரகதவல்லி** என்பவர் இளநிலை உதவியாளர் பணிநியமனத்திற்கான குறைந்த பட்ச கல்வித் தகுதி 10-வது வகுப்பு (SSLC இடைநிலைக் கல்வி) தேர்ச்சி பெற்றுள்ளார். **செல்வி.க.மரகதவல்லி** என்பவரின் SSLC மதிப்பெண் சான்றிதழ் உண்மைத் தன்மை உடையன என பார்வை (6)-ல் காணும் அரசுத் தேர்வுகள் துறை உதவி இயக்குநரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பணியிடைக் காலமான அரசு ஊழியர் **திரு.சு.கணேசன்** என்பவரது குடும்ப வறிய நிலையைக் கருத்தில் கொண்டும், தனியர் சமர்ப்பித்த சான்றுகள், விண்ணப்பங்கள் மற்றும் அரசாணைகளின் அடிப்படையிலும் **திரு.சு.கணேசன்** வாரிசும் மகளுமான **செல்வி.க.மரகதவல்லி** என்பவரை கருணை அடிப்படையில் **ரூ.19500-62000(நிலை-8)** என்ற ஊதிய விகிதத்தில் **பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில்** காலியாகவுள்ள **ஊர்நல அலுவலர் நிலை-2** பணியிடத்தில் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு பணி நியமனம் செய்து இதன்வழி ஆணையிடப்படுகிறது.

நிபந்தனைகள் :

1) இப்பணி நியமனம் முற்றிலும் தற்காலிகமானது.
2) பணி நியமனம் வழங்கப்பட்டுள்ள இடத்தில் பணியேற்பு செய்திட பணியேற்பிடைக்காலம் ஏதும் அனுமதிக்கப்படமாட்டாது. இது தொடர்பாக எவ்வித கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
3) பணி நியமன ஆணை கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து 15 நாட்களுக்குள் மருத்துவ உடல் தகுதி சான்றினை சம்மந்தப்பட்ட அலுவலகத் தலைவரிடம் சமர்ப்பித்து உடனடியாக பணியேற்பு செய்திட வேண்டும்.
4) சமர்ப்பித்துள்ள சான்றிதழ்கள் / அளித்துள்ள சான்றுகள் மற்றும் ஆவணங்கள் தவறானவை என பின்னர் தெரியவரின் பணி நியமனம் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்து உத்தரவிடப்பட்டு சம்பந்தப்பட்டவர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும்.
5) ஓய்வூதியம், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும்.
6) தனது வேலைவாய்ப்பு அலுவலக பதிவு அட்டையினை, பணியேற்பு செய்யும் அலுவலகத்தில் ஒப்படைத்து பணியேற்பு செய்திட வேண்டும்.
7) தகுதிகாண்பருவ காலத்திற்குள்(தொடர்ச்சியான மூன்றாண்டுகளில் இரண்டு ஆண்டு பணிக்காலம்) உரிய துறைத் தேர்வுகள் தேர்ச்சி பெற வேண்டும்.
8) தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள் 1973 விதி எண் 7ன்படி, தனியரது அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் விவர அறிக்கை உரிய படிவத்தில் பணியேற்பு செய்த 3 மாதத்திற்குள் தாக்கல் செய்யவேண்டும்.

4/5

மாவட்ட ஆட்சியர்,
திருநெல்வேலி.

24/02/2021

பெறுநர்

**செல்வி.க.மரகதவல்லி,**
த/பெ.சு.கணேசன்
4, மானக் கஞ்சார நாயனார் தெரு,
பாளையங்கோட்டை.

**நகல்:**

1. ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை-15.
2. வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)/(கி.ஊ) பாளையங்கோட்டை.
3. ந3 இருப்புக் கோப்பு.